## முலடியன பிரதேச சபை
## மாத்தறை மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 12 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 25 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து முலடியன பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது மத்திய சுற்றாடல் அதிகார சபை இருந்து நன்கொடை ஒன்றாக கிடைத்திருந்த ரூபா 499,991 தொகை பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் கொள்வனவு செய்திருந்த ரூபா 549,780 தொகை பெறுமதியான தளபாட உபகரணங்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களையும் கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபைக்கு சொந்தமான ரூபா 356,350 தொகை பெறுமதியான காணி கட்டிடங்கள் மற்றும் பல்வேறு ஏற்பாடுகளின் கீழ் ரூபா 4,065,764 தொகை பெறுமதியான நிர்மாணவேலைகள் மற்றும் நவீனமயப்படுத்தல்கள் என்பனவற்றை மூலதனப்படுத்தி இருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | |
|---|---|---|
| (iii) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பொது வழங்கல் கடன்கொடுத்தோர் ரூபா 66,178 தொகை மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள 09 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளின் படி காட்டப் பட்டுள்ள மீதிகளிடையே, சமமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 35,764,191 தொகை ஆகும். | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்கள் இணக்கஞ் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நெடுங்காலமாக காணப்படும் சமமின்மை ஆதலால் எதிர்கால த்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) தொங்கல் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2013 ஆண்டு முதல் மாற்றமின்றி நிதிக் கூற்றுக்களில் முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 36,289 தொகைக்கான தொங்கல் கணக்கில் செலவு மீதியை இனங்கண்டு தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொங்கல் கணக்கு தீர்க்கப்பட வேண்டும். | நீண்ட காலமாக காணப்படும் மீதி ஒன்றாக காணப்பட்டமையால் கண்டுபிடிக்க முடியாதுள்ளது. |

**(ஈ) கணக்காய்விற்குத் தேவையான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை யால் கூட்டுத்தொகை ரூபா 127,491,823 தொகைக்கான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது | நிதிக் கூற்றுக் களில் காட்டப் பட்டுள்ள கணக்கு மீதி களை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய் வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 143 | திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்பு பேரேடு மாதாந்தம் கூட்டப்பட்டு கூட்டுத்தொகை பிரதான பேரேட்டுக் கணக்குடன் சீராக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | வைப்புப் பேரேட்டில் மாதாந்த கூட்டுத் தொகை பிரதான பேரேட்டில் கணக்குகளுடன் இணங்காமை நீண்ட நாட்கள் காணப்படுவதாகும். |
| (ii) விதி 193 | பாதீட்டு மற்றும் குறைநிரப்பு அங்கீகரிக்கப்பட்ட செலவுகளுடன் செலவு விடயங்களின் உண்மையான செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாக காரணங்களைக் காட்டும் கூற்றொன்று கணக்குகளுடன் சமர்ப்பித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) விதி 203 மற்றும் 204 | நுகர்வு பண்டங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iv) விதி 213 | சபை செயலாளரினால் கையொப்பமிடப்பட்ட வழங்கள் கட்டளை இன்றி களஞ்சியப் பண்டங்கள் வழங்கப்பட்டிருந்தது. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்

| | | | |
|---|---|---|---|
| (i) நி.பி. 110 | நட்டங்கள் சேதங்கள் பதிவேடு ஒன்று நாளது வரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் நட்டங்கள் சேதங்கள் பதிவேடு நாளது வரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) நி.பி. 571 | ரூபா 137,850 இற்கான காலம் கடந்த 18 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்படுத்துவேன். |
| (iii) நி.பி. 396 | வழங்கப்பட்டு 06 மாதங்கள் கடந்துள்ள ரூபா 35,964 தொகைக்கான 11 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய காலம் பூர்த்தி அடைந்த உடன் காசோலைகளை வருமானத்தை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,673,497 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,685,046 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 626,000 | 1,393,058 | 1,393,058 | 76,231 | 281,000 | 22,342 | 15,892 | 76,231 |
| வாடகை | 4,445,600 | 4,963,939 | 4,057,086 | 1,385,184 | 4,166,200 | 4,547,260 | 4,592,409 | 478,331 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 1,100,540 | 597,502 | 597,502 | 10,450 | 1,131,300 | 1,746,206 | 1,746,206 | 10,450 |
| ஏனைய வருமானங்கள் | 12,188,750 | 12,482,503 | 10,653,369 | 16,747,208 | 16,670,500 | 15,716,053 | 13,666,819 | 14,918,074 |
| மொத்தம் | 18,360,890 | 19,437,002 | 16,701,015 | 18,219,073 | 22,249,000 | 22,031,861 | 20,021,326 | 15,483,086 |

**2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்**

**வீத வரி மற்றும் வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **ஏக்கர் வரி**<br>ஆரம்ப நிலுவை ரூபா 76,295 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 22,298 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 98,593 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 15,065 தொகையாக காணப்பட்ட மையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 83,528 தொகை நிலுவை மீதி காணப்பட்டது. நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்காக பிரதேச சபை சட்டத்தினால் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | ஆதனங்களின் கணிப்பீடு மேற்கொண்டு நிலுவை ஏக்கர் வரி அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றேன். |

**2.2.3 வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆரம்ப நிலுவை ரூபா 478,331 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 4,963,939 தொகை ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 5,442,270 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 4,057,086 தொயையாகக் காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 1,385,184 தொகை நிலுவை யாகக் காணப்பட்டது. | நிலுவை வாடகை விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரச் சபை அலுவலகத்தின் பிராந்திய பொறியியலாளர் அலுவலகம் நடாத்தப்படுகின்ற ரண்சேகொட உப அலுவலக கட்டிடத்தில் இருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப் பட வேண்டிய ரூபா 40,000 இற்கான வாடகை அறவிடப் பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகை விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | சபைக்குச் சொந்தமான 41 கடை களில் இருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடை நிலுவை வாடகை ரூபா 598,907 தொகையாகக் காணப்பட்டதுடன் அந்த நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | நிலுவை வாடகை விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 கம்பனிகளினால் நிறுவப்பட்டிருந்த 03 செலுத்துகை டவர்களுக்காக அந்த டவர்கள் நிறுவப்பட்டிருந்த திகதி முதல் இது வரை வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | அறவிடப்பட வேண்டிய அனுமதிப்பத்திரம் தொடர் பாக எழுத்துமூலம் அறிவி க்கப்பட்டுள்ளது. |

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,087,273 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 15,649,999 தொகை முத்திரைக் கட்டணம் பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | 2018 திசெம்பர் வரை அட்டவணையின் பிரகாரம் ரூபா 50,585 இற்கான நீதிமன்றத் தண்டப் பணம் கிடைக்க வேண்டியிருந்தது. அட்டவணை கிடைத்துள்ள முத்திரை கட்டணங்களின் பிரகாரம் 2017 ஏப்ரல் மாதம் வரை நிலுவை ரூபா 3,551,240 ஆகும். முத்திரைக் கட்டண |

| | | |
|---|---|---|
| | | அட்டவணை 2017 ஏப்ரல் மாதத்தின் பின்னர் கிடைத்திருக்கவில்லை. |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைககள்** | | |
| ஆளணித் திட்டத்தில் அங்கீகரிக் கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 03 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், 03 மிகை பதவியணியினை முறைப் படுத்துவதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணி மிகை கள் பதவிக்கான முறைப்படுத்துவதற் காக மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மிகை பதவிகளை அங்கீ கரிப்பதற்காக தென் மாகாண சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) தென் மாகாண, உள்ளூராட்சி ஆணை யாளரின் இலக்கம் தபபா/பபாகொ/ 2010/01 மற்றும் 2010 திசெம்பர் 27 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் வாடகையாளர் உடன்படிக் கைகளின் நிபந்தனைகளை முறித்து ள்ள காரணத்தினால் உடன்படிக்கை ஒன்று இரத்தாகிய சந்தர்ப்பம் ஒன்றில் மீண்டும் டென்டர் பண்ணி புதிய வாடகையாளர்களுக்கு வாடகைக்கு கொடுக்கப்பட வேண்டும் எனினும் சபையினால் கடை வாடகை செலுத்தாத 10 கடை உரிமையாளர் களிடம் கடைகளின் சாவிகளை பெற்றுக்கொள்ளல் மாத்திரம் மேற் கொள்ளப்பட்டிருந்தது. | உடன்படிக்கை முறித்துள்ள சந்தர்ப்பத்தில் உடன்படிக்கையை இரத்து செய்து மீண்டும் டென்டர் பண்ண வேண்டும். | மாக்கந்துரை பொது சந்தையின் 10 கடை களின் வாடகை நிலுவை யாகக் காட்டப்பட்ட சந்தர்ப்பத்தில் சாவிகளை பெற்றிருந்தமையால் நிலுவைத் தொகை யொன்று காட்டப்படுவ துடன் மீதியான 13 கடைகளில் கடை வாடகை அறவீடு செய்வ தற்காக அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முலடியன பிரதேச செயலகத்திற்கு சொந்தமான காணி ஒன்றில் கொம்பத்தல வாராந்த சந்தை நடாத்துவதற்காக 2015 ஆண்டின் போது மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சந்தை வளவில் அச்சுக் கற்கள் பதிப்பதற்காக ரூபா 380,921 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இது வரை சந்தையில் இருந்து வருமானம் ஏதும் உழைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சந்தையை உயிர்ப்புள்ளதாக நடாத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2017 ஆண்டிற்கான டென்டர் பண்ணியிருந்த போதிலும் எவரும் ஏற்றுக்கொள்ள முன் வந்திருக்கவில்லை. 2018 ஆண்டின் போது டென்டர் பண்ணி இருக்காததுடன் 2019 ஆண்டிற்காக மீண்டும் சந்தையை நடவாத்துவதற்காக மேற்கொள்ளப்படுகின்றது. |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தென் மாகாண, உள்ளுராட்சி ஆணையாளரின் தபபா/15 இலக்கம் 2007 மார்ச் 19 திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் சபைக்கு சொந்தமான காணிகளில் எல்லைகளை தயாரித்த குறிப்பிட்ட காணியில் சபையின் பெயரை காட்சிப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | சிக்கல் தன்மையுள்ள காணிகளை தீர்த்த பின்னர் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் புதிதாக சபைக்கு உரித்தாக்கிய காணிகளில் சபையின் பெயரைக் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கான தேவையான மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்கள் தொடர்புபடுத்தியுள்ளேன். |

### 3.3.2 விளைவற்ற/ குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 01 ஏக்கர் 40 பர்சஸ் அளவான 02 காணிகள் ஆக்கபூர்மான கருமங்களில் ஈடுபடுத்தாமல் விளைவற்குக் காணப்பட்டது. | சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஆக்கபூர்வமான விடயங்களுக்கு பயன்படுத்தியிருக்கவில்லை. | குறிப்பிட்ட காணிகளின் எல்லைகளை தீர்த்து கருவாகன்றுகள் நடுவதற்கு மற்றும் பல்கரும கட்டிடமாக அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வாடகை அடிப்படையில் வழங்கியிருந்த 03 நடமாடும் குடில்களுக்கான உபகரணங்களின் பெறுமதி ரூபா 89,386 தொகையாகக் காணப்பட்டதுடன் அந்த உபகரணங்களை சபைக்கு ஒப்படைத்திருக்காமையால் 2019 பெப்ரவரி 20 திகதி அளவில் ரூபா 20,000 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. மீதித்தொகையாகிய ரூபா 69,386 தொகை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதித்தொகையை விரைவாக அறவிடப்பட வேண்டும். | மீதி நிலுவைத் தொகையை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 07 செலவு விடயங்களில் சேமிப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 5,706,507 தொகையாகக் காணப்பட்டதுடன் அப்பெறுமதிகள் 08 சதவீதம் முதல் 40 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | வருடாந்த மதிப்பீடு நடைமுறை சாத்தியமாக தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆண்டின் போது ஒவ்வொரு செலவுத் தலைப்புக்களின் மூலம் மேற்கொள்ளக் கூடிய குறிப்பிட்ட செலவுகள் தொடர்பாக விபரங்கள் உட்படுத்தப்பட்டுள்ளதுடன் வருமானம் தொடர்பாக விபரங்களையும் உட்படுத்தி இந்த நிலைமையை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 02 வருமான விடயங்களை நெருங்கியிருக்காத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 654,263 தொகையாக இருந்ததுடன், அந்தப் பெறுமதி 46 முதல் 63 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | வருடாந்த மதிப்பீட்டு நடைமுறை சாத்தியமாக தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆண்டின் போது ஒவ்வொரு செலவுத் தலைப்புக்களின் மூலம் மேற்கொள்ளக் கூடிய குறிப்பிட்ட செலவுகள் தொடர்பாக விபரங்கள் உட்படுத்தப்பட்டுள்ளதுடன் வருமானம் தொடர்பாக விபரங்களையும் உட்படுத்தி இந்த நிலைமையை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியசரின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென்மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/01/ந.ச.லே இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. நிதிப் பிரமாணம் 134 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடி இணக்கத்தை பெற்று இருந்த துடன், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தி ருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட வேண்டும். | உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு கடமை பட்டியல் ஒன்று சாட்டப்பட் டிருக்காததுடன் வேறு கடமை களும் உட்பட உள்ளகக் கணக்காய்வு அலுவல்கள் மேற்கொள்வதற்கும் சாட்டப்பட் டிருந்தது. உள்ளகக் கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் செயற்பட்டு மாதாந் தம் காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்த உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் முகாமைத்துவத்திற்கு சமர்ப் பித்தல் மாத்திரம் மேற்கொள் ளப்படுகின்றது. |